ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==================================================================================

## அறிவுரை 5. அந்திவணக்கம் தவறாதே.

ஸந்தியாவந்தனத்தை விடக்கூடாது.

ஆகையால் தந்தாமுக்கடைத்த शौच आचमन स्नान सन्ध्योपासनादिकளை விட்டால்

सन्ध्याहीनोऽशुचिर्नित्यं अनर्हस्सर्वकर्मसु ।
यदन्यत्कुरुते कर्म न तस्य फलभाक् भवेत् ।।
ஸந்த்யாஹீனோஶுசிர்நித்யம் அநர்ஹஸ்ஸர்வகர்மஸு ।
யதந்யத்குருதே கர்ம ந தஸ்ய பலபாக் பவேத் ॥

இத்யாதிகளிற்படியே விசேஷகைங்கர்யங்களுக்கு அநர்ஹனாம்.

\- விரோதபரிஹாரம்

எல்லாக் கருமங்களுக்கும் அடிப்படையானவை ஸ்நாநஸந்தியைகள். அவற்றைச் செய்யாமல் ஜபம், ஹோமம், முதலிய மற்ற கர்மங்களைச் செய்யக்கூடாது. இதை வலியுறுத்தும் விரோதபரிஹாரஸூக்தியின் அர்த்தம்:

சௌசம், ஸ்நானம், ஸந்தியாவந்தனம் முதலியவற்றை ஒருபோதும் விடலாகாது. ஸந்த்யையை விட்டவன் அசுத்தமாகிறான். எப்போதும் எல்லாக் கருமங்களிலும் தகுதி இழக்கிறான். அவன் வேறெந்தக் கருமம் செய்தாலும் அதன் பலனை

அடையாதொழிகிறான் என்று சாத்திரம் சொன்னபடி விசேஷ கைங்கர்யங்களுக்கு யோக்கியதை அற்றுப்போகிறான்.

ஸந்தியாவந்தனம் பண்ணாத பிராம்மணர்கள் கோவிலில் உத்ஸவங்கள், அர்ச்சனை, சிராத்தம், விவாஹாதிகள், எது பண்ணினாலும் பலன் ஏற்படாது. வீணாகப் பணத்தையும் சிரமத்தையும் மற்ற கருமங்களில் இடுவானேன்? ஸந்தியை செய்தாலொழிய அவை எல்லாமே வியர்த்தம் தான்.

****************